தரம் 11

பாடசாலை மட்ட இறுதி மதிப்பீடு - 2023(2024)

# குடியியற் கல்வி

புள்ளி

சுட்டெண்:

நேரம் : 03 மணித்தியாலங்கள்

## வினாத்தாள் I

கவனிக்க

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக
* சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து சரியான இலக்கத்தை உமது விடைத்தாளில் அடையாளமிடுக.

01. கடந்த காலத்தில் நேரடி சனநாயக தத்துவத்தின் அடிப்படையில் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரசு எது?

1. பிரித்தானியா 2. எதென்ஸ் 3. சுவிற்சலாந்து 4. இந்தியா

02. இலங்கைப் பிரசையொருவருக்கு வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான தகைமையைப் பெறும் வயதெல்லை

1. 30 வயது பூர்த்தியாகியிருத்தல் 2. 24 வயது பூர்த்தியாகியிருத்தல்
3. 21 வயது பூர்த்தியாகியிருத்தல் 4. 18 வயது பூர்த்தியாகியிருத்தல்

03. பல கட்சி முறையை பின்பற்றும் நாடுகளைக் கொண்ட விடைத் தொகுதி எது?

1. இலங்கை, இந்தியா 2. சீனா, கியூபா
3. ஐக்கிய அமரிக்கா, பெரிய பிரத்தானியா 4. ஸ்பெயின், இத்தாலி

04. பாராளுமன்ற அரசாங்க முறையில் நிறைவேற்றுத்துறையாக விளங்குவது,

1. ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவை
2. சபாநாயகர் உள்ளிட்ட ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள்
3. பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை
4. ஜனாதிபதியும் பிரதமரும்

05. ஐரோப்பாவில் ஆரம்பத்தில் தோன்றிய தேசிய அரசுகள் இரண்டைக் கொண்ட விடை.

1. இங்கிலாந்து, பிரான்ஸ் 2. இங்கிலாந்து, ஜேர்மனி
3. ஒல்லாந்து, போர்த்துக்கல் 4. வெளிநாட்டவர்கள்

06. சனநாயக ஆட்சி முறையின் அடிப்படை எண்ணக்கருக்களாக அமைபவை?

1. சுதந்திரம், சட்டம், சமத்துவம், 2. சுதந்திரம், சமத்துவம், உரிமைகள்
3. சட்டம், நீதி, சமத்துவம் 4. சுதந்திரம், வாக்குரிமை, சட்டம்

07. ஆங்கிலப் புரட்சி இடம் பெற்ற ஆண்டு எது?

1. கி.பி.1948 2. கி.பி.1917 3. கி.பி.1789 4. கி.பி.1688

08. இலங்கையில் அதிகாரப் பகிர்வு நோக்குடன் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் செய்த சீர்திருத்தம் எது?

1. 13 ஆம் அரசியல் யாப்பு சீர்திருத்தம் 2. 15 ஆம் அரசியல் யாப்பு சீர்திருத்தம்
3. 18 ஆம் அரசியல் யாப்பு சீர்திருத்தம் 4. 21 ஆம் அரசியல் யாப்பு சீர்திருத்தம்

09. பின்வருவனவற்றுள் ஒற்றையாட்சி முறை நிலவும் நாடு எது?

1. ஐக்கிய அமெரிக்கா
2. இலங்கை
3. சுவிற்சலாந்து
4. அவுஸ்திரேலியா

10. ஐக்கிய அமெரிக்காவில் மத்தியரசிற்கும் மாநில அரசிற்குமிடையில் அதிகாரங்களை செயற்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள நீதிமன்றம் எது?

1. மேல் நீதிமன்றம்
2. மாநில நீதிமன்றம்
3. மீயுயர் நீதிமன்றம்
4. உயர் நீதிமன்றம்

11. குறிப்பிட்ட நாடு ஒன்றில் அரசுக்கு உரித்தான அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சி அலகுகளுக்கு வழங்கப்படுவது எவ்வாறு அழைக்கப்படும்?

1. அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல்
2. அதிகாரத்தைப் பரவலாக்குதல்
3. அதிகாரத்தை ஒழுங்குபடுத்தல்
4. அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல்

12. சமூகமொன்றில் பல்வேறு பண்பாடுகளுக்குரிய மக்கள் குழுக்கள் ஒற்றுமையாக வாழும் சமூகமானது

1. பன்மதச் சமூகம் எனப்படும்
2. பன்மைப் பண்பாட்டுச் சமூகம் எனப்படும்
3. பல் தேசிய சமூகம் எனப்படும்
4. பல்லினச் சமூகம் எனப்படும்

13. தற்கால உலகின் பண்பாட்டுக் கலப்பிற்கு ஏதுவாயுள்ள முக்கிய காரணம் யாது?

1. உலகம் கிராமமாக மாற்றமுறல்
2. வர்த்தகத் தொடர்புகள் விரிவடைதல்
3. நாடுகளின் புவியியல் அமைவிடம்
4. மேற்கு நாடுகளுக்கு அடிமையாகுதல்

14. பன்மைப் பண்பாட்டுச் சமூகமாக இலங்கை உருவாகுவதில் பங்களிப்புச் செய்த புவியியற் காரணி,

1. தெற்காசிய நாடாக இருத்தல்
2. சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற கடற்கரையைக் கொண்டிருத்தல்
3. இந்து சமுத்தரத்தின் மத்தியில் அமைந்திருத்தல்
4. திருகோணமலையில் இயற்கைத் துறைமுகம் அமைந்திருத்தல்

15. பொருளாதாரம் அல்லாத பண்டமொன்றையும் பொருளாதார பண்டமொன்றையும் ஒழுங்கு முறையில் காட்டும் சரியான விடை எது?

1. நீரும் வளியும்
2. மருந்துகளும் சூரிய ஒளியும்
3. நீரும் உணவும்
4. உடையும் உணவும்

16. பொருளாதாரச் செயன்முறை ஒன்றினை வரிசை ஒழுங்கில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. உற்பத்தி, நுகர்வு, விநியோகம்
2. உற்பத்தி; களஞ்சியப்படுத்தல், நுகர்வு
3. உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், விநியோகம்
4. உற்பத்தி, விநியோகம், நுகர்வு

17. ஊழியச் செறிவான தொழிநுட்பப் பயன்பாடு என்பதனாற் கருதப்படுவது?

1. இயந்திர உழைப்பை அதிகளவில் பயன்படுத்துதல்
2. பொருட்களை விநியோகிக்கும் போது மனித உழைப்பை அதிகளவில் பயன்படுத்துதல்
3. பொருட்களை விளம்பரப்படுத்துவதற்குப் பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்துதல்
4. பொருள் உற்பத்தியில் மனித உழைப்பை அதிகளவில் பயன்படுத்துதல்

18. நாட்டின் எல்லையை அடிப்படையாகக் கொண்டு மோதல்கள் உருவாகியுள்ள அரசு

1. இஸ்ரேல்
2. அயர்லாந்து
3. சிரியா
4. ருவாண்டா

19. நபரினுள், நபர்களுக்கிடையே, குடும்பத்தினுள், குடும்பங்களுக்கிடையே ஏற்படும் மோதல்கள் அறியப்படுவது?

1. சர்வதேச மோதல்கள் எனப்படும்
2. குடும்ப மோதல்கள் எனப்படும்
3. சிக்கலான மோதல்கள் எனப்படும்
4. நபர்களுக்கிடையிலான மோதல்கள் எனப்படும்

20. ஆலோசனைகளை முன்வைத்தல் மற்றும் பேரம் பேசுதல் பெருமளவில் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. தனிப்பட்ட பிணக்குகள், ஊழியரது பிணக்குகள்
2. தொழில் பிணக்குகள், தோட்டத் தொழிலாளர் பிணக்குகள்
3. தனிப்பட்ட பிணக்குகள், பொதுப் பிணக்குகள்
4. சொத்துப் பிணக்குகள், குடும்பப் பிணக்குகள்

21. இலங்கையில் இறுதியானதும் மிக உயர்ந்த நீதிமன்றமாகவும் செயற்படுவது,

1. மேன் முறையீட்டு நீதிமன்றம்
2. உயர் நீதிமன்றம்
3. மேல் நீதிமன்றம்
4. இராணுவ நீதிமன்றம்

22. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு அத்தண்டனையை நிறைவேற்றுமாறு தேவையான சிபார்சுளை ஜனாதிபதிக்கு வழங்குவது

1. பிரதம நீதியரசரினாலாகும்
2. சொலிஸ்டர் ஜெனரலாகும்
3. நீதி அமைச்சரினாலாகும்
4. சட்டமா அதிபரினாலாகும்

23. நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக பதவி வகிப்பவர் யார்?

1. பிரதம நீதியரசர்
2. சொலிசிட்டர் ஜெனரல்
3. சட்டமா அதிபர்
4. நீதியமைச்சின் செயலாளர்

24. அல் குர்ஆனிலோ ஹதீஸிலோ தீர்வு சொல்லப்படாத ஒரு புதிய பிரச்சினை தோன்றினால் அதனை அல் குர்ஆன், ஹதீஸில் தீர்வு சொல்லப்படாத பிரச்சினையோடு ஒப்புநோக்கி அதன் தீர்வை புதிய பிரச்சினைக்கும் பயன்படுத்துவதனைக் குறிப்பது,

1. அல் குர்ஆன்
2. ஹதீஸ்
3. கியாஸ்
4. இஜ்மாஉ

25. 1931 டொனமூர் யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டத்துறை என்ன பெயரால் அழைக்கப்பட்டது?

1. சட்டவாக்கக் கழகம்க
2. அரசுக் கழகம்
3. பாராளுமன்றம்
4. தேசிய அரசுப் பேரவை

26. பதுளை, மொனராகல்லை ஆகிய மாவட்டங்கள் எம்மாகாணத்துக்குரியது ?

1. சப்பிரகமுவ மாகாணம்
2. ஊவா மாகாணம்
3. வட மத்திய மாகாணம்
4. வடமேல் மாகாணம்

27. தற்போதுள்ள பிரதேச சபை முறை உருவாக்கப்பட்ட ஆண்டு எது?

1. கி.பி.1987
2. கி.பி.1980
3. கி.பி.1939
4. கி.பி.1934

28. தற்போதைய இலங்கை அரசியல் யாப்பிற்கமைய தேர்தல் மூலமாக பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எத்தனை பேர்?

1. 225 பேர்
2. 196 பேர்
3. 29 பேர்
4. 101 பேர்

29. ஐக்கிய நாடுகள் சபையின் மூலம் மனித உரிமைப் பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு எது?

1. கி.பி.1917
2. கி.பி.1945
3. கி.பி.1948
4. கி.பி.1972

30. பின்வருவனவற்றுள் பெண்களுக்கெதிராக மேற்க்கொள்ளப்படும் அனைத்து விதமான பாரபட்சங்களையும் இல்லாதொழிக்கும் உடன்படிக்கை (CEDAW) க்கு அமைய பெண்களுக்குரித்தான உரிமைகளில் அடங்காதது

1. கல்விக்கும் பயிற்சிக்குமான உரிமை
2. சமூகபாரபட்சங்களிலிருந்து பாதுகாக்கும் உரிமை
3. சுகாதாரத்திற்கும் போசணைக்குமான உரிமை
4. திருமணம் முடிப்பதற்கும் தொழில் புரிவதற்குமான உரிமை

31. இலங்கையில் அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகளை விபரிக்கும் எண்ணக்கரு,

1. சமூக உரிமைகள் 2. குடியியல் உரிமைகள் 3. மக்கள் உரிமைகள் 4. அடிப்படை உரிமைகள்

32. சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட சிறுவர் உரிமைப் பிரகடனத்தில் இலங்கை எப்போது கைச்சாத்திட்டது?

1. கி.பி.1987 2. கி.பி.1989 3. கி.பி.1991 4. கி.பி.1999

33. உயிரற்ற கூறுகளடங்கிய சோடிப் பதத்தைக் காண்பிக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

1. வளிக்கோளம், தாவரங்கள் 2. காலநிலை, மண்
3. பாறைகள், நுண்ணுயிர்கள் 4. காலநிலை, நுண்ணுயிர்கள்

34. சூழலிருந்து கிடைக்கும் சேவையில் வாழ்க்கைக்கு உதவும் சேவைகளை மட்டும் கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

1. சூரிய ஒளி, நீர் 2. நிலம், உயிர் சுவட்டு எரிபொருள்
3. நீர், நிலம் 4. சூரிய சுவட்டு எரிபொருள், சூரிய ஒளி

35. இயற்கை காரணிகளினால் மாத்திரம் நீர் மாசடையும் சந்தர்ப்பத்தைச் சரியாகக் குறிப்பிடும் விடை எது?

1. எரிமலை, புவியதிர்வு, கழிவுகளை வெட்டுதல்
2. புவியதிர்வு, சுனாமி, இரத்தினக் கல் அகழ்வு
3. புவியதிர்வு, சுனாமி, செயற்கையான நீர்த்தேக்கங்களை அமைத்தல்
4. எரிமலை, புவியதிர்வு, சுனாமி

36. பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் (PQL) தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுபவைகளின் தொகுதி எது?

1. கல்வி, பிறப்பின்போதான ஆயுள் எதிர்பார்ப்பு, கொள்வனவு சக்தி
2. மொத்த தேசிய உற்பத்தி, பொருளாதார வளர்ச்சி வேகம், தலா தேசிய உற்பத்தி
3. எழுத்தறிவு, பிறப்பின்போதான ஆயுள் எதிர்பார்ப்பு, சிசு மரணவீதம்
4. கல்வி, சுகாதாரம், வாழ்க்கைச் செலவு

37. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் எத்தனை?

1. 05 நாடுகள் 2. 10 நாடுகள் 3. 54 நாடுகள் 4. 15 நாடுகள்

38. ஆசியான் (ASEAN) அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள நகரம் எது?

1. கொழும்பு 2. நியோர்க் 3. ஜகர்த்தா 4.மாலே

39. தென்னாசிய வலய நாடுகள் இணைந்து தோற்றுவித்த அமைப்பு எது?

1. ஆசியான் 2. சார்க் 3. பிம்ஸ்டெக் 4. பொதுநலவாய அமைப்பு

40. உலக சுகாதார தாபனம் (WHO) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

1. கி.பி.1948 2. கி.பி.1945 3. கி.பி.1944 4. கி.பி.1919

**(40x1= 40புள்ளிகள்)**

## (62) குடியியற் கல்வி
## வினாத்தாள் II

**கவனிக்க வேண்டியது:**

* முதலாம் வினா கட்டாயமானது மேலும் நான்கு வினாக்களுடன் மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. (i) பிரசைகளின் கடமைகளை பிரதானமாக எவ்வாறு வகைப்படுத்தலாம்?

(ii) மத்திய அரசும் மாகாணசபைகளும் சமமாக கொண்டிருக்கும் இரண்டு வகையான அதிகாரங்களை எழுதுக.

(iii) பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்திய ஆக்கிரமிப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(iv) உற்பத்திக் காரணிகள் இரண்டையும் அவற்றுக்குச் செய்யும் கொடுப்பணவுகள் இரண்டின் பெயர்களையும் எழுதுக.

(v) சர்வதேச மோதல்களின் இரு வகைகளையும் குறிப்பிடுக.

(vi) இலங்கையின் தற்போதைய நீதித் துறையின் அதியுயர் நிறுவகத்தையும் மிகக் கீழான நீதி நிறுவகத்தையும் குறிப்பிடுக.

(vii) தென் மாகாணத்திற்குரிய மாவட்டங்கள் இரண்டை எழுதுக.

(viii) மனித உரிமைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட வரலாற்றுச் சம்பவங்கள் இரண்டைக் குறிப்பிடுக..

(ix) கடமைகளின் பிரதான இரு பிரிவுகளும் எவை?.

(x) வளி மாசடைவதால் ஏற்படும் திமைகள் இரண்டை எழுதுக. **(10x2=20 புள்ளிகள்)**

02. (i) சனநாயகம் என்ற எண்ணக்கருவை சுருக்கமாக அறிமுகப்படுத்துக. (2 புள்ளிகள்)

(ii) சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) (a) சனநாயக ஆட்சி முறை வெற்றி பெறுவதற்கு எதிர்கட்சியினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட ஒன்றை நிறைவேற்ற வேண்டிய முறையினை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

03. (i) நுண்மையான மோதல்களுக்கு இரண்டு உதாரணங்கள் தருக. (2 புள்ளிகள்)

(ii) மோதலை ஏற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான மூலங்கள் 3ஐ குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) (a) சமஷ்டி ஆட்சி முறையின் அனுகூலங்கள் மூன்றை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட ஒன்றை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

04. (i) மனிதனது வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகள் 2ஐ குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) எந்தவொரு பொருளாதார முறையும் எதிர் நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) (a) சந்தைப் பொருளாதார முறையில் அவதானிக்கக் கூடிய வகைகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) சமதர்ம பொருளாதாரத்தின் அடிப்படைப் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக (2 புள்ளிகள்)

05. (i) சட்டமா அதிபரின் பணிகளையும் அதிகாரங்களையும் நிறைவேற்றும் பொருட்டு அவருக்கு உதவியாக செயற்படும் அதிகாரிகள் இருவரின் பெயர்களை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) (a) குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை பெறக்கூடிய குற்றச் செயல்கள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு மேற்க் கொள்ளக் கூடிய செயற்பாடுகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

06. (i) கற்கோளம் பாதிக்கப்படுவதனால் ஏற்படும் பாதிப்புக்கள் 2ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) சூழலிருந்து மனிதனுக்கு வழங்கப்படும் சேவைகள் மூன்றையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) (a) காடழிப்பைத் தடுப்பதற்கு பிரஜை என்றரீதியில் மேற்க் கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட ஒன்றைச் எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதனை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

07. (i) சர்வதேச உறவுகள் இடம் பெறும் இரு முறைகளையும் குறிப்பிடுக. 2 புள்ளிகள்)

(ii) பலமான நாடுகள் பலவீனமான நாடுகளின் மீது செல்வாக்குச் செலுத்தும் துறைகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) (a) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) அபிவிருத்தியடைந்த நாடுகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் 2ஐ எழுதுக. (2 புள்ளிகள்)

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023(2024)

தரம் 11

## விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் | குடியியற் கல்வி

பகுதி i

| | | | |
|---|---|---|---|
| 1 - 2 | 11 - 4 | 21 - 2 | 31 - 4 |
| 2 - 4 | 12 - 2 | 22 - 4 | 32 - 3 |
| 3 - 1 | 13 - 1 | 23 - 1 | 33 - 2 |
| 4 - 3 | 14 - 3 | 24 - 3 | 34 - 1 |
| 5 - 1 | 15 - 3 | 25 - 2 | 35 - 4 |
| 6 - 2 | 16 - 4 | 26 - 1 | 36 - 3 |
| 7 - 3 | 17 - 4 | 27 - 1 | 37 - 4 |
| 8 - 1 | 18 - 1 | 28 - 2 | 38 - 3 |
| 9 - 2 | 19 - 3 | 29 - 3 | 39 - 2 |
| 10- 4 | 20 - 2 | 30 - 4 | 40 - 1 |

**(40x1=40Marks)**

பகுதி ii

01. (i) * சட்டரீதியான கடமைகள் * பண்பாட்டுரீதியான கடமைகள்

(ii) * திட்டமிடலும் தேசிய வீடமைப்பும் நிர்மாணமும்

* சமுகசேவைகளும் புனர்வாழ்வும் * விவசாயமும் கமநல சேவையும்

(iii) * சேனன் குத்திகன் படையெடுப்பு * கலிங்க மாகனின் படையெடுப்பு

* பண்டு பாரிந்த குழு * ஐரோப்பியரின் குடிவரவு

(iv) * நிலம் - வாடகை * உழைப்பு - ஊதியம் / கூலி / சம்பளம்

* மூலதனம்- வட்டி * முயற்சி - இலாபம்

(v) * கொள்கைரீதியான மோதல் * யுத்தரீதியான மோதல்

(vi) * உயர் நீதிமன்றம் * நீதவான் நீதிமன்றம்

(vii) * அம்பாந்தோட்டை மாவட்டம் * காலி மாவட்டம் * மாத்தறை மாவட்டம்

(viii) * 1215- மக்னா காட்டா உடன்படிக்கை * 1789- பிரான்சியப் பிரகடனம்

* 1689 - பிரித்தானிய மனித உரிமைகள் பிரகடனம் * 1917- ரஸ்யப் புரட்சி

* 1776 - அமெரிக் சுதந்திரப் பிரகடனம்

(ix) * சட்டரீதியான கடமைகள்

* பண்பாட்டுரீதியான கடமைகள்ஷ

(x) * புவி வெப்பமடைதல் * அமில மழைபெய்தல் * காலநிலை மாற்றங்கள் ஏற்படுதல்

* ஓசோன் படை பாதிப்படைதல் * தூசுப்படை ஏற்டுதல் *பனிமலைகள் உருகுதல்

* கடல நீர் மட்டம் உயர்வடைதல்

* பொருத்தமான விடைகளுக்கு புள்ளி வழங்கவும் **(10x2=20 புள்ளிகள்)**

02. (i) * நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆட்சி செயற்பாடுகளி மக்களின் பங்களிப்பைப் பெறும் ஆட்சி முறையாகும். (02 புள்ளிகள்)

(ii) * குறித்த காலத்தினுள் தேர்தல் நடைறெுதல்
* முறையான தகுதியுடையவர்களுக்கு வாக்காளராவதற்கும் வேட்பாளராவதற்குமான உரிமை காணப்படல்.
* சுதந்திரமாக தேர்தல் செயற்பாடுகளில் பங்கு கொள்வதற்கான உரிமை காணப்படல்
* தேர்தல் சட்ட திட்டங்களுக்கு அமைய தேர்தல் நடாத்தப்படல்
* சுமுகமான சூழலில் தேர்தல் நடாத்தப்படல் (3x1=2 புள்ளிகள்)

(iii) (A) * ஆளுங்கட்சியினது சிறந்த செயற்பாடுகள் வெற்றிகரமாக நடாத்தப்படுவதற்கு ஒத்துழைப்பினை வழங்குதல்.
* ஆளுங்கட்சியின் செயற்பாடுகளை ஆராய்ந்து, அபிவிருத்திக்கான விமர்சனங்களை முன்வைத்து ஆளுங்கட்சியை நல்வழிப்படுத்தல்
* ஆளுங்கட்சியின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்தல்
* மிகச் சிறப்பான மாற்று ஆட்சியை அமைப்பதற்காகச் செயற்படுதல் (3x1=2 புள்ளிகள்)

(B) * மேற் சொன்ன ஒன்றை பொருத்தமான முறையில் விளக்கியிருப்பின் (2 புள்ளிகள்)

03. (i) * உள முரண்பாடு * வீட்டு வன்முறை * காணிப்பிரச்சினை (2x1=2 புள்ளிகள்)

(ii) * இனப்பாகுபாடு * சமூக பொருளாதார நிலை
* அரசியல் கருத்து முரண்பாடு ஏனைய சமூக கொள்கைகளை மதிக்காமை

(3x1= 3 புள்ளிகள்)

(iii) (A) * பல்லின சமூகமொன்றில் பல்வகைமைக்கு மதிப்பளிக்கும் வகையில் பொதுத் தேசியம்மொன்றைக் கட்டியெழுப்புதல்
* பரந்த நிலப்பரப்புகள் காணப்படும் அரசுகளில் நிர்வாகதீதியிலான தீர்மானங்களை இலகுவாக மேற்க் கொள்ளக் கூடியதாக இருத்தல்.
* ஒரு அரசு கட்டளையிடும் வகையில் செயற்படுவதைத் தடுக்க முடியுமாயிருந்தல்
* சனநாயக ஆடஎதாவது விடயம் சக்திவாய்ந்ததாகக் காணப்படல் (3x1= 3 புள்ளிகள்)

(B) * மேற் குறித்த விடயம் ஒன்றைச் சுருக்கமாக விளக்கியிருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்

04. (i) * உணவு

* உடை

* உறையுள் (2x1=2 புள்ளிகள்)

(ii) * எதனை எந்தளவு உற்பத்தி செய்வது?

* எவ்வாறு உற்பத்தி செய்வது?

* யாருக்காக உற்பத்தி செய்வது? (3x1=3 புள்ளிகள்)

(iii) (A)

* முதலாளித்துவ பொருளாதாரத்தின் சந்தை இயல்பினை அதிகமாக கொண்டிருத்தல்.

* சமதர்மப் பொருளாதாரத்தின் சந்தை இயல்பினை அதிகமாக கொண்டிருத்தல

* நிலைமாறும் பொருளாதாரம் அல்லது சந்தை இயல்பினை அதிகமாக கொண்டிருத்தல்

(3x1=3 புள்ளிகள்)

(B) * உற்பத்திக் காரணிள் அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டிருத்தல்
* மத்திய திட்டமிடல் குழுவின் மூலம் பொருளாதாரம் நிர்வகிக்கப்படல்
* அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது சமூக நன்மையை கருத்திற் கொண்டு செயற்படல (2x1=2 புள்ளிகள்)

05. (i) * சொலிசிட்டர் ஜெனரல்

* மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்

* பிரதி சொலிசிட்டர் ஜெனரல்

* அரச சிரஷ்ட சட்டத்தரணிகள்

* அரச சட்டத்தரணிகள் (2x1=2 புள்ளிகள்)

(ii) * நீதிபதிகளின் நியமனம் * நீதிபதிகளை பதவி நீக்கம் செய்தல்

* நீதிபதிகளின் வேதனம் * நீதிச் சேவை ஆணைக்குழுவை அமைத்தல்

* தேவையற்ற தலையீடுகள், கட்டப்பாடுகள் என்பவற்றைக் குறைத்தல்

போன்ற செயற்பாடுகள் அரசயில் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ளமை.

(3x1=3 புள்ளிகள்)

(iii) (A) * களவு * கொலை * கொள்ளை

* கற்பழிப்பு * போதைப் பொருள் விற்பனை * சிறுவர் துஸ்பிரயோகம்

(3x1=3 புள்ளிகள்)

(B) மேலே (A) இல் குறிப்பிட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு மேற்க் கொள்ளக் கூடிய செயற்பாடுகளின் விளக்கத்திற்கு (2 புள்ளிகள்)

06. (i)
* சுற்றாடலின் இயற்கை அழகு அழிவுறல்
* தரிசு நிலம் உருவாகுதல்
* நிலம் வளமற்றுப் போதல்
* நோய்கள் பரவுதல்
* மண்வளம் குன்றுதல்
* வெள்ளப் பெருக்கு ஏற்படல்
* காடுகளின் மூடு படைகள் அழிவடைதல்.
* நிலக் கீழ் நீர் குறைதல்

(2x1=2 புள்ளிகள்)

(ii)
* வாழ்க்கைக்கு உதவும் சேவைகள்
* கழிவு உறிஞ்சல் சேவைகள்
* பொருளாதார உதவிச் சேவைகள் (3x1=3 புள்ளிகள்)

(iii) (A)
* மக்களை தெளிவுபடுத்தல்
* காடுகளை வளர்த்தல்
* பலகைக்குப் பதிலாக வேறு மூலப் பொருட்களைப் பயன்படுத்தல்
* பாடசாலைத் தோட்டம், வீட்டுத் தோட்டம் ஆகியவற்றில் மரங்களை நடுதல்
* வனப்பாதுகாப்பு சட்டம் தொடர்பில் தான் அறிவூட்டம் பெறுவதுடன் ஏனையோரையும் அறிவூட்டல்
* இவை போன்ற பொருத்தமான விடைகள் எழுதியிருப்பின் 03 புள்ளிகள் வழங்கவும். (3x1=3 புள்ளிகள்)

(B) * மேலே குறிப்பிட்ட ஏதாவது ஒரு முறையை நடைமுறைப்படுத்தும் விதம் பற்றி சுருக்கமாக விளக்கியிருப்பின் இரண்டு (02) புள்ளிகள் வழங்கவும்.

07. (i)
* இராஜதந்திர உறவுகள்
* விரதியல் உறவுகள் (2x1=2 புள்ளிகள்)

(ii)
* சர்வதேச வர்த்தகம்
* கடன் மற்றும் நிவாரணம் வழங்கல்
* பொருளாதார அபிவிருத்தி
* பாதுகாப்புத் துறை
* வேலை வாய்ப்பு துறை (3x1=3 புள்ளிகள்)

(iii) (A)
* பிரித்தானியா
* பிரான்ஸ்
* ரஸ்யா
* ஐக்கிய அமெரிக்கா
* சீனா

(3x1=3 புள்ளிகள்)

(B) * சூழல் மாசடைதல் * பயங்கர வாதம் * சந்தைப் போட்டி
* மூலப் பொருட்ளைப் பெற்றுக் கொள்வதில் சிரமம் * வலுச்சக்தி நெருக்கடி
* சமூகப் பிரச்சினைகள் உக்கிரமடைதல் (2x1=2 புள்ளிகள்)